தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவாகியுள்ளது. இந்த கட்சி 107 சீட்டுகளைப் பெற்றுள்ளது. ஆட்சியமைக்க 118 சீட்டுகள் தேவை என்ற நிலையில், காங்கிரஸ் கட்சி விஜய்க்கு ஆதரவு கொடுத்துள்ளது. இதனால், விஜக்கு ஆதரவு 112 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 6 சீட்டுகள் தேவையாகவுள்ளது. இதனால், பிற கட்சிகளின் ஆதரவை பெற விஜய் தரப்பு தீவிரமாக முயன்று வருகிறது.

இந்த நிலையில் , ஸோஹோ நிறுவனத்தின் ஸ்ரீதர் வேம்பு,"மெஜாரிட்டி கிடைக்காத சூழலில் குடியரசுத் தலைவர் ஆட்சியுடன் மறு தேர்தல் நடத்தவேண்டும்வாக்குக்கு, பணம் கொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான், யாருக்கு உண்மையான ஆதரவு என்பதை அறிய முடியும் . விஜய் சூப்பர் மெஜாரிட்டி பெறுவார் " என்று தெரிவித்துள்ளார்.




இதற்கிடையே, நடிகர் விஜய் நடித்த ஜனநாயகன் படம் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்சார் பிரச்னை காரணமாக பொங்கல் தினத்தில் வெளியாக வேண்டிய இந்த படம் சிக்கலில் சிக்கிக் கொண்டது. இந்த படத்துக்கு அட்வான்ஸ் புக்கிங் மட்டும் 100 கோடி வசூலாகியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதோடு, ஜனநாயகன் படத்தின் டைட்டில் கார்டில், ' தி ஹானரபிள் சீப் மினிஸ்டர் ஆஃப் தமிழ்நாடு சி.ஜோசப் விஜய்' in என்கிற வாசம் இடம் பெற்ற வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது. நடிகர் விஜயின் ரசிகர்களே இந்த வீடியோவை இணையத்தில் பர விட்டுள்ளதாக கூறப்படுகிறது. நடிகர் விஜய் தமிழ்நாடு முதல்வராக பொறுப்பேற்கும் பட்சத்தில் தியேட்ரில் ஜனநாயகன் படம் வெளியாகும் போது, இதே போன்று டைட்டில் கார்டு வெளியிட வேண்டுமென்றும் விஜய் ரசிகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இப்படி ஒரு டைட்டில் கார்டு போடப்பட்டால், இத்தகையை பெருமையை பெறும் ஒரே இந்திய நடிகர் விஜய்தான். நடிகர் எம். ஜி. ஆர். முதல்வராக பொறுப்பேற்றதும் நடிப்பதை நிறுத்தி விட்டார். நடிகர் விஜயும் இந்த தேர்தலுக்கு முன்னரே, ஜனநாயகன் படத்தை வெளியிட திட்டமிட்டிருந்தார். ஆனால் , சூழல் காரணமாக ஜனநாயகன் தேர்தலுக்கு பிறகு வெளியாகவுள்ளது.

# குழந்தைகளுக்கு 2 நிமிட நூடுல்ஸ் சமைத்து கொடுக்குறீர்களா... ஆபத்து பெற்றோரே...!



வேகமான வாழ்க்கை முறையில், குழந்தைகளுக்கான காலை டிபன் அல்லது மாலை ஸ்நாக்ஸுக்கு பெற்றோர்கள் இன்ஸ்டண்ட் நூடுல்ஸ் பாக்கெட்டுகளை வாங்கி சமைக்கின்றனர். 2 நிமிடத்தில் தயாராகிவிடும் என்ற காரணத்தால் பலரும் அதனை தேர்வு செய்கின்றனர். ஆனால், இந்த விரைவான ருசிக்கு பின்னால் குழந்தைகளின் எதிர்கால ஆரோக்கியத்தை கேள்விக்குறியாக்கும் பெரும் ஆபத்து உள்ளது.

ஒரு சிறிய பாக்கெட்டில் உள்ள உப்பின் அளவு, குழந்தைக்கு ஒரு நாளைக்கு தேவையான அளவை விட இரட்டிப்பு ஆகும். அதிக உப்பின் பயன்பாடு சிறுநீரக மற்றும் இதயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். இதோடு, நூடுல்சில் சேர்க்கப்படும் செயற்கை சுவையூட்டிகள் குழந்தையின் மூளை வளர்ச்சியை தடுக்கும். எதிர்காலத்தில் நினைவாற்றல் குறைவு மற்றும் நரம்பு சம்பந்தமான பிரச்சனைகளை உண்டாக்கும் என ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

நூடுல்ஸ் பெரும்பாலும் மைதாவால் செய்யப்பட்டு, சத்துக்கள் குறைவாக இருப்பதால் உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் கிடையாது. இதன் காரணமாக வயிற்றுப்பசை, குடல் பிரச்சனை மற்றும் வயிற்றுவலி ஏற்படக்கூடும். தொடர்ந்து இதை சாப்பிடும் குழந்தைகளுக்கு சர்க்கரை நோய், கொழுப்பு சேர்தல் போன்ற உடல் பிரச்சனைகள் ஏற்படும்.

குழந்தைகளுக்கு வாரத்திற்கு ஒருமுறை கூட நூடுல்ஸ், பாஸ்தா போன்ற தயாரிப்புகளை தவிர்க்கவும். அதற்கு பதிலாக புதிய பழங்கள், காய்கறி மற்றும் ஆரோக்கியமான சூப் போன்ற உணவுகளை வழங்கவும் அறிவுறுத்துகின்றனர்.

# உலகளாவிய சுற்றுச்சூழல் விருது வென்ற சென்னை மெட்ரோ


சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், 2026ஆம் ஆண்டிற்கான உலகளாவிய சுற்றுச்சூழல் சிறப்பு விருதுகள் நிகழ்வில் சிறந்த சுற்றுச்சூழல் தலைமைத்துவமிக்க திட்டத்திற்கான உயரிய விருதை வென்றுள்ளது.

போக்குவரத்துத் துறையில் மெட்ரோ ரயில் பிரிவின் கீழ் சென்னை மெட்ரோ மேற்கொண்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பசுமை முயற்சிகளைப் பாராட்டி இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. வரும் மே 22ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெறவுள்ள உலகளாவிய எரிசக்தித் தலைவர்கள் உச்சி மாநாட்டில் இந்த விருது அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட உள்ளது. மெட்ரோ திட்டமிடல், கட்டுமானம் மற்றும் இயக்க முறைகளில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்காக சென்னை மெட்ரோ இந்த விருதைப் பெற்றுள்ளது. பசுமைப் பகுதிகளை பாதுகாப்பதற்காக வழித்தடங்களில் மாற்றங்கள் செய்ததுடன், கட்டுமானப் பணிகளில் நவீன பசுமை வடிவமைப்பு முறைகளையும் சென்னை மெட்ரோ செயல்படுத்தியுள்ளது. மேலும், இயற்கை வளங்களை பாதுகாப்பது, மரக்கன்றுகள் நடுதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப கட்டுமானங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளிலும் சென்னை மெட்ரோ முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. சென்னையை பசுமை நிறைந்த மற்றும் வலிமையான நகரமாக மாற்றும் நோக்கில் மெட்ரோ நிர்வாகம் தொடர்ந்து செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான போக்குவரத்து சேவையில் சென்னை மெட்ரோ மேற்கொண்ட முயற்சிகளுக்கு கிடைத்துள்ள இந்த உலகளாவிய அங்கீகாரம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.




# நாசிக் டி.சி.எஸ் மதமாற்ற விவகாரம்: 25 நாட்களுக்குப் பிறகு நிடா கான் கைது

மகாராஸ்டி மாநிலம் நாசிக் டி.சி. எஸ். அலுவலகத்தில் வேலைபார்த்து வந்த சில இஸ்லாமிய ஊழியர்கள், தங்களது அதிகாரத்தைப்பயன்படுத்தி இந்துப் பெண்களைக் குறிவைத்து கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். வேலையில் புரமோஷன் மற்றும் சம்பள உயர்வு தருவதாக ஆசை காட்டி, பெண்களைக் கட்டாயமாக நமாஸ் செய்யவைப்பதும், நோன்பு இருக்க வைப்பதும் அங்கு வாடிக்கையாக இருந்துள்ளது. இந்த ஒட்டுமொத்த சதிவலையும் 'நெக்ஸ்ட் இந்துபெண்' என்றபெயரில் இயங்கிய ரகசிய வாட்ஸ்அப் குழு மூலம் அரங்கேற்றப்பட்டுள்ளது. இதற்கு, நாசிக் டி.சி.எஸ் நிறுவனத்தின் ஹெச். ஆர் மேலாளர் நிடா கான் என்பவரும் துணையாக இருந்துள்ளார்.



போலீசார் தேவையான ஆதாரங்கள் கிடைத்ததும், உடனடியாக நடவடிக்கையில் இறங்கினர். சீனியர் மேலாளர்கள் அஷ்வினி சானய்னி மற்றும் தவுஷிக் உள்ளிட்ட 8 பேர் கொண்ட கும்பலை நாசிப் போலீஸ் மடக்கி பிடித்தது. குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்த ஹெச்.ஆர். மோலாளர் நிடா கான் கடந்த 25 நாட்களாக தலைமறைவாக இருந்தார். இவர், நேற்றிரவு சத்ரபதிசம்பாஜிநகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். நிடாகான் மீது மத உணர்வுகளைப் புண்படுத்தியதாகவும், பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு உதவியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தான் 8 வார கர்ப்பிணியாக இருப்பதாகக் கூறி, அவர் முன்ஜாமீன் கோரி நாசிக் நீதிமன்றத்தை நாடியிருந்தார், ஆனால், இந்த மாத தொடக்கத்தில் அவரது மனு நிராகரிக்கப்பட்டது. நாசிக் காவல்துறையின் சிறப்புப்புலனாய்வுக் குழு டி.சி.எஸ் நிறுவனத்தில் நடந்த 9 பாலியல் துன்புறுத்தல் வழக்குகளை விசாரித்து வருகிறது. பெண் ஊழியர்களைச் துன்புறுத்தியது, கட்டாய மதமாற்ற முயற்சி, மத உணர்வுகளைப் புண்படுத்துதல், மனரீதியான துன்புறுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளை இந்த வழக்கு உள்ளடக்கியது. குற்றம் சாட்டப்பட்டவர்களின் தவுஷிக் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு மெக்காவில் இருந்து நாசிக் நகரத்துக்கு திரும்பியுள்ளார். இவர்தான், இந்த மத மாற்றத்துக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளார். இது தொடர்பாக 78 இமெயில் புகார் வந்துள்ளன. ஆனாலும், நடவடிக்கை இல்லை. கடந்த 4 ஆண்டுகளாக இந்த கொடுமை டி.சி.எஸ் அலுவலகத்தில் நடந்துள்ளது. இந்தியாவின் மிகவும் கவுரவமான நிறுவனமாக பார்க்கப்படும் டாடா குழுமத்துக்கு சொந்தமான ஒரு அலுவலகத்திலேயே மதமாற்றம், பாலியல் வன்கொடுமை புகார்கள் எழுந்தது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# 'எனக்கு கான்வாய் வேண்டாம்' - விஜய் சொன்னது ஏன்?

நடிகர் விஜயின் தவெக கட்சி நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் 107 தொகுதிகளை கைப்பற்றியுள்ளது. ஆனால், ஆட்சியமைக்க தேவையான 118 இடங்களை பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சி ஆதரவு கடிதம் கொடுத்த நிலையில், தமிழக பொறுப்பு ஆளுநராகவுள்ள கேரள ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அல்ரேகரை சந்தித்து விஜய், ஆட்சியமைக்க அழைக்க கேட்டுக் கொண்டார். ஆனால், ஆளுநரோ... 'பொறுத்து இருங்கள் சொல்கிறேன்' என்று கூறிவிட்டார். பின்னர், கேரளாவுக்கும் புறப்பட்டு சென்று விட்டார்.



இதனால், விஜய் நாளை முதல்வராக பதவியேற்பது தள்ளி போயுள்ளது. இதற்கிடையே, திமுக ஆதரவில் அதிமுக ஆட்சியமைக்கப்போவதாகவும் தகவல் வெளியாகியுள் ளது. அதிமுகவில் சில எம்.எல். ஏக்களை பேரம் பேசி வாங்க தவெக முயன்ற தாகவும் கூறப்படுகிறது. இதற்கு, லீமா ரோஸ் போன்ற பணம் படைத்த அதிமுக எம்.எல். ஏக்கள் பின்னணியில் இருப்பதாக சொல்கி றார்கள். இதனால், சுதாரித்துக் கொண்ட எடப்பாடி பழனிச்சாமி அதிமுக எம்.எல்.ஏக்களை புதுச்சேரியிலுள்ள ரிசார்ட்டில் தங்க வைத்துள்ளார். தவெகவுக்கு அதிமுக ஒரு போதும் ஆதரவு தராது என்றும் தெரிவிக்கப்பட்டு விட்டது. இனி, அடுத்த அடுத்த நாட்களில்தான் தமிழக அரசியலின் நிலை தெரிய வரும்.

இதற்கிடையே, தமிழக டி.ஜி.பி சந்தீப் ராய் ரத்தோர் விஜயை சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது, தர்மராஜ் ஐ.பி.எஸ் தலைமையில் விஜய்க்கு முதல்வருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு குறித்து விவாதித்துள்ளனர். டி.ஜி. பியிடம் பேசிய விஜய், 'இப்போதைக்கு சூழல் சரியில்லை. வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு , கான்வாய் போன்றவை எனக்கு வேண்டாம். அதை வாபஸ் பெற்று விடுங்கள். அட்சி அமைத்த பிறகுதான், புரோட்டக்கால் படி மீண்டும் பாதுகாப்பு தாருங்கள் ' என்று கேட்டுக் கொண்டுள்ளார். இதையடுத்தே, அவருக்கு வழங்கப்பட்ட கான்வாய் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது. இதற்கிடையே, தாம்பரம் முன்னாள் கமிஷனர் அமல்ராஜூம் விஜயை நேற்று சந்தித்து பேசியுள்ளார். அப்போது, தலைநகரத்தின் கமிஷனராகும் தனது ஆசையையும் விஜயிடம் நாசுக்காக கூறியுள்ளார். விஜய் அவரின் விருப்பத்தை அமைதியாக கேட்டுக் கொண்டாராம். தேர்தல் நடத்தை அமலுக்கு வந்ததும் தாம்பரம் கமிஷனர் பதவியில் இருந்து அமல்ராஜ் நீக்கப்பட்டார். தற்போது, அவர் எந்த பதவியிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தனியார் ஹோட்டலில் ஆதவ் அர்ஜுனாவிடத்தில் திருமா கொடுத்த கடிதம்... பின்னணி என்ன?

விடுதலைசிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனை தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா சென்னையில் உள்ள தனியார் ஹோட்டலில் சந்தித்தார். இந்த சந்திப்பின் போது விஜய் தலைமையில் தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்கு வெளியில் இருந்து ஆதரவு அளிப்பதாக திருமாவளவன் கடிதத்தை ஆதவ் அர்ஜுனாவிடம் கொடுத்துள்ளார்.



தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் முதலமைச்சராவதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆதரவு அளிக்கலாமா வேண்டாமா என்பது குறித்து மே 8ம் தேதி நிர்வாகிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார் திருமாவளவன். கூட்டத்தில் பேசிய பல நிர்வாகிகளும் இது நமக்கு மிக முக்கியமான வாய்ப்பு . இந்த வாய்ப்பை தவறவிடக்கூடாது விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அடிப்படை கோரிக்கையான அதிகார பகிர்வு, ஆட்சியில் பங்கு ஆகியவற்றை அடைவதற்கு இந்த நேரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே விஜய்க்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் சிந்தனைச்செல்வன்,"விஜய் தரப்பில் மகிழ்ச்சியான அணுகுமுறையே இல்லை. மூன்றாவதுமுறைஎம்பியாக இருக்கும் நமது தலைவரை அவர்கள் முறைப்படி மரியாதை கொடுத்து அணுகவில்லை. எனவே, அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் விஷயத்தில் அவசரப்பட வேண்டாம் " என்று வலியுறுத்தினார்.


ஆலோசனைக் கூட்டம் முடிந்தபிறகு திருமாவளவன் தனது காரில் இல்லாமல் இன்னொரு சிறிய காரில் ஏறி திடீரென திமுக தலைவர் மு. க. ஸ்டாலினை சென்று சந்தித்தார். அவரிடம் கட்சியின் பெரும்பாலான நிர்வாகிகள் விஜய் அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதை ஸ்டாலினிடம் தெரிவித்துள்ளார்.

சென்னை அசோக் நகரில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று திருமாவளவனை தமிழக வெற்றி கழக தொண்டர்கள் காலை முதலே திரண்டனர். விஜய் அரசமைப்பதற்கான ஆதரவை திருமாவளவன் காலை 10 மணிக்கு அறிவிப்பதாக சொல்லப்பட்ட நிலையில், மீண்டும் மாலை 4 மணிக்கு அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் தான் தனியார் ஹோட்டலில் இருந்த திருமாவளவனை சந்தித்த ஆதவ் அர்ஜுனாவிடம் விஜய் ஆட்சிக்கு வெளியில் இருந்து ஆதரவு அளிப்பதாக திருமாவளவன் கடிதம் கொடுத்துள்ளார்.

# அஞ்சல் சேமிப்பு திட்டங்களுக்கு பான் கார்ட் கட்டாயம்

மத்திய அஞ்சல் துறை தனது சேமிப்பு மற்றும் முதலீட்டுத் திட்டங்களுக்கான விதிகளில் முக்கிய மாற்றங்களை அறிவித்துள்ளது. வரி ஏய்ப்பைத் தடுக்கும் நோக்கில் இந்த புதிய நடைமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




புதிய விதிகளின்படி, அஞ்சலக சேமிப்பு திட்டங்களில் முதலீடு செய்யவும், சேமிப்பு கணக்கிலிருந்து பணம் எடுக்கவும் பான் அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பான் அட்டை இல்லாதவர்கள் அதற்குப் பதிலாக 'படிவம் 97' சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இதுவரை வரிப் பிடித்தத்தைத் தவிர்க்க பயன்படுத்தப்பட்டு வந்த 15G மற்றும் 15H படிவங்கள் இனி செல்லாது என்றும், அதற்குப் பதிலாக 'படிவம் 121' மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நிதியாண்டில் வரிக்குட்பட்ட வருமானம் இல்லாதவர்கள் மட்டுமே இந்த 'படிவம் 121'-ஐ சமர்ப்பித்து வரிச் சலுகை பெற முடியும். என்றும் அஞ்சல் துறை தெரிவித்துள்ளது.

அஞ்சலக சேமிப்பு கணக்கு அல்லது நிலையான வைப்பு திட்டங்களில் முதலீடு செய்துள்ளவர்கள், புதிய விதிமுறைகளுக்கு ஏற்ப தேவையான ஆவணங்களை உடனடியாக புதுப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நள்ளிரவில் தனியாக நின்ற பெண் ஐ.பி.எஸ்.: ஜொள் விட்ட 40 ஆண்கள்



தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் பெண்களின் பாதுகாப்பைஉறுதிசெய்யும் நோக்கில், மல்காஜ்கிரி காவல் ஆணையர் சுமதி நள்ளிரவில் மேற்கொண்ட அதிரடி 'அண்டர்கவர்' ஆபரேஷன் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சாதாரணப் பெண் பயணி போல நள்ளிரவு 12:30 முதல் அதிகாலை 3:30 மணி வரை தில்சுக்நகர் பேருந்து நிலையத்தில் சுமதி தனியாக நின்று கள நிலவரத்தை ஆய்வுசெய்தார். ஒரு பெண் நள்ளிரவில் தனியாகப் பயணிக்கும்போது சந்திக்கும் சவால்களைக் கண்டறிய இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த மூன்று மணி நேர இடைவெளியில், சுமார் 40 ஆண்கள் அவரிடம் வந்து தேவையற்ற முறையில் பேச முயன்றதாகப் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தவறாக அணுகிய ஆண்களில் பெரும்பாலானோர் மது அல்லது கஞ்சா போதையில் இருந்ததும், சிலர் மாணவர்கள் மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. ஆணையர் சுமதி தனியாக நின்றிருந்தாலும், அவருக்குப் பாதுகாப்பாகவும், குற்றவாளிகளைப் பிடிக்கவும் சாதாரண உடையில் போலீஸ் குழுவினர் அருகிலேயே மறைந்திருந்தனர். பெண்கள் நள்ளிரவில் நடமாடும்போது எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களைக் கண்டறிவது, இரவு நேர ரோந்துப் பணியின் திறனை மதிப்பிடுவது மற்றும் பொது இடங்களில் உள்ள பாதுகாப்பு ஓட்டைகளை அடையாளம் காண்பது ஆகியவையே இந்த ஆபரேஷனின் முக்கிய நோக்கமாகும்.

ஐபிஎஸ் அதிகாரியின் இந்தத் துணிச்சலான முயற்சி சமூக வலைதளங்களில் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க வெறும் கேமராக்கள் மட்டும் போதாது. இது போன்ற நேரடி கள ஆய்வுகள் அவசியம் என்பதை இந்தச் சம்பவம் உணர்த்தியுள்ளது.

# உதகை: கல்லட்டி மலைப் பாதையில் போக்குவரத்துக்கு முற்றிலும் தடை



கோடை கொளுத்த தொடங்கியுள்ளது. மக்கள் சுற்றுலாத் தளங்களை நோக்கி படையெடுக்க தொடங்கியுள்ளனர். தமிழகத்தின் முக்கிய சுற்றுலா பகுதியான கொடைக்கானல், உதகை, போன்ற நகரங்களை நோக்கி மக்கள் குவியத் தொடங்கியுள்ளனர். வார இறுதி நாட்களில் மக்கள் கூட்டம் இன்னும் அலை மோதுகிறது. வாகன நெரிசலைத் தடுக்க மே 1ம் தேதி முதல் மேட்டுப்பாளையம் - உதகை ஒரு வழியாக மாற்றப்பட்டுள்ளது. இனிமேல், மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகை செல்லும் வாகனங்கள் குன்னூர் வழியாக மட்டுமே செல்ல வேண்டும். உதகையில் இருந்துமேட்டுப்பாளையம் வரும் வாகனங்கள் கோத்தகிரி வழியாக மட்டுமே வர வேண்டும்.

தமிழகத்தின் மிகவும் அபாயக்கரமான சாலையான உதகை - மசினகுடி சாலை முற்றிலும் மூடப்பட்டு விட்டது. உதகை தலைகுந்தாவில் இருந்து முதுமலை வழியாக செல்லும் பாதைதான் உதகை -மசினகுடி சாலை ஆகும். இந்தசாலை முதுமலையில் தெப்பக்காடு என்ற இடத்தில் உதகை- மைசூர் தேசிய நெடுஞ்சாலையுடன் இணையும். உதகை- மைசூர் சாலையில் கூடலூர் சென்று அங்கிருந்து முதுமலை காடுவழியாக செல்ல கிட்டத்தட்ட 70 கி.மீ சுற்றிச் செல்லவேண்டும். ஆனால், கல்லட்டி மலை பாதை வழியாகசென்றால்35கிலோ மீட்டர்தான். இதனால், சுற்றுலாப்பயணிகள் இந்த கல்லட்டி மலைப் பாதை வழியாக மிக விரைவாக முதுமலையை சென்றடைவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், ஆபத்தான இந்த மலைப் பாதையில் வாகனங்களை சரிவர இயக்கதெரியாதகாரணத்தினால் ஏராளமான விபத்துகள் ஏற்பட்டன. உயிர்ப்பலிகளும் நிகழ்ந்துக் கொண்டிருந்தது. இதையடுத்து , இந்த பாதையில் இறங்கி செல்லவும், ஏறி வரவும் வாகனங்களுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், கர்நாடகத்தில் இருந்து பண்டிப்பூர் வழியாக வரும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் கூடலூர் சென்று நடுவட்டம் வழியாக மட்டுமே உதகைக்குள் வர முடியும்.







# வாகனத்தில் ஒட்டப்பட்டிருந்த எம்.எல்.ஏ அனுமதி சீட்டை அகற்றிய அம்மன்.கே அர்ச்சுணன்



தமிழக சட்டமன்ற தேர்தலில் அம்மன் கே.அர்ச்சுனன் கோவை தெற்றுதொகுதியில்போட்டியிட்டார். இந்ததொகுதியில் போட்டியிட்ட திமுவின் செந்தில்பாலாஜி 4,990 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கடந்த 10 வருடங்களாக கோவை தெற்கு மற்றும் வடக்கு தொகுதியில் எம்.எல். ஏவாக இருந்த அம்மன் கே. அர்ச்சுனன் இந்த முறை பதவியை இழக்க நேரிட்டது. தொடர்ந்து ,தனது வாகனத்தில் ஒட்டப்பட்டிருந்த சட்டமன்ற வாகன அனுமதி சீட்டை முறைப்படி அம்மன் . கே அர்ச்சுணன் அகற்றினார். அப்போது, அந்த சீட்டுக்கு அவர் முத்தமிட்டது பலரையும் நெகிழ வைத்தது.

## ஊட்டி ஏ.டி.சி பஸ் ஸ்டாண்ட் கழிவறை மூடல்; மக்கள் அவதி

ஊட்டி ஏ.டி.சி., பகுதி பொதுமக்கள், பஸ் பயணிகள் , சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்து செல்லும்மையப்பகுதியாக உள்ளது. பொதுமக்களின் வசதிக்காக, 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன கட்டண கழிப்பிட வசதி அமைக்கப்பட்டது.

கழிப்பிடம் திறக்கப்பட்ட நாளிலிருந்து பராமரிப்பில் ஏற்பட்ட தொய்வு காரணமாக, அவ்வப்போது மூடப்பட்டு வருகிறது. கழிப்பிடத்தை பயன்படுத்த வரும் குறிப்பாக பெண்கள் கடும் அவதியில் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். நகராட்சி நிர்வாகத்திற்கு பொதுமக்கள் பல முறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, இதனை திறக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

# மயிலாடுதுறையில் காங்கிரஸார் மீது திமுவினர் தாக்குதல்

மயிலாடுதுறையில் காங்கிரஸார் மீது திமுவினர் தாக்குதல் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலுக்கு பின்பு தமிழக அரசியலில் பல்வேறு சம்பவங்கள் அரங்கேறி வருகிறது. குறிப்பாக 108 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள தவெக ஆட்சி அமைக்க 118 தொகுதிகள் வேண்டும். ஆனால், பெரும்பான்மை இல்லாத நிலையில் மற்ற கட்சிகளின் ஆதரவை தவெக கோரி வருகிறது. காங்கிரஸ் கட்சியினர் மட்டுமே தவெகவுக்கு ஆதரவளித்துள்ளனர். இதனால்,விசிகதவெகவுக்கு ஆதரவளிக்க மறுத்து விட்டது. கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், தவெகவை ஆட்சியமைக்க அழைக்காத தமிழக அளுநரை கண்டித்து, காங்கிரஸ் கட்சியினர் இன்று போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தனர். அந்த வகையில், மயிலாடுதுறையில் காங்கிரஸார் இன்று போராட்டத்தில்ஈடுபட்டனர். இந்த சமயத்தில் அங்கு வந்த திமுகவினர் காங்கிரஸ் கட்சியினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இது, ஒரு கட்டத்தில் கைகலப்பாக மாறியது. ஆத்திரமடைந்த திமுகவினர் காங்கிரஸ் கட்சியினரை ஓட ஓட விரட்டி தாக்கினர். அவர்களின் கட்சிக்கொடியையும்பறித்து உடைர்து எறிந்தனர். அடி தாங்க முடியாத காங்கிரஸ் கட்சியினர் தாங்கள் கொண்டு வந்த கட்சிக் கொடியினை தூக்கிப் போட்டு விட்டு ஓட்டம் பிடித்தனர். இந்த சம்பவம் மயிலாடுதுறையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# கோடை காலத்தில் வீட்டு கிச்சனை கூலாக வைப்பது எப்படி?



கோடைக் காலத்தில் வெளியே மட்டுமல்ல வீடுகளுக்குள்ளும் வெப்பம் அதிகரிக்கும். குறிப்பாக , வீடுகளில் சமையல் அறைதான் அதிக வெப்பம் கொண்டதாக இருக்கும். கேஸ் எரிவது, நீராவி, நல்ல வெண்டிலேஷன் இல்லாதது, கோடையின் தகிக்கும் வெப்பம் ஆகியவைச் சேர்ந்து சமயல் அறையை மிகுந்தா சூடாக ஆக்கியிருக்கும். நல்ல வெண்டிலேஷன் இல்லாத சமையல் அறையில் ஸ்டவ்வின் அருகில் நீண்ட நேரம் நின்று கொண்டிருப்பது, உடலுக்கு சோர்வைத் தரக்கூடியது. சூடான சமையலறையில் 30 முதல் 60 நிமிடங்கள் வரை சமைப்பது, வியர்வை மூலம் அதிகப்படியான திரவ இழப்பை ஏற்படுத்தக்கூடும், குறிப்பாக , வயதான பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள்எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். உங்களை அறியாமலேயே நீங்கள், மயக்கம் அடையக் கூடும். சமைக்கும்போது தலைசுற்றுவது போன்ற அறிகுறி,சமைக்கும்முன்பே வியர்வை இடைவிடாமல் கொட்டுவது, சமைத்துக் கொண்டிருக்கும்போதே, கொஞ்சம்வெளியேசென்று சற்று காற்றில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வருவது, உணவிலிருந்து வழக்கத்தை விட விரைவாகவே புளித்த வாசனை வீசுவது, சமையல்வேலைகளுக்குப் பிறகு நீங்கள் வழக்கத்திற்கு மாறாக சோர்வாக உணர்வது போன்ற காரணிகள் உங்கள் கிச்சன், அதிக வெக்கையின் பிடியில் இருக்கிறதுஎன்றுஅர்த்தம். காலை 11 மணிக்குள் அனைத்து சமையல் வேலைகளையும் முடித்து விட வேண்டும். 12 மணி முதல்4மணிவரைகிச்சனில் சமையல் வேலைகள் செய்யாமல் இருப்பது நல்லது. ஜன்னல்களை திறந்து வையுங்கள். காற்றை வெளியேற்றும் பேன் இருந்தால்ஆன் செய்யுங்கள். சமை யல் அறையைக் காற்றோட்டமாக வைத்திருங்கள். காலை, இரவு என வெப்பம் குறைவான சமையத்தில் மட்டுமே சமைக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். சமைக்கும் போது, நல்ல காட்டன் உடைகளை அணியவும். சாலடுகள், தயிர் சாதம், சாண்ட்விச்கள், பழங்கள், ஓட்ஸ், ஆவியில் வேகவைத்த உணவுகள், தக்காளிசாதம், எலுமிச்சை சாதம் என சாப்பிடப் பழகிக் கொள்ளலாம். சாதம், குழம்பு, பொரியல், கூட்டு என்று ஏராளமான உணவுகளை சமைப்பதைத் தவிர்ப்பது நல்லது. கிச்சன் என்பது சமைப்பதற்கு மட்டுமன்று, நமது உடல் நலனையும் பாதுகாக்கும் வகையில், முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.



# தமிழகத்தில் 60 ஆண்டுகால திராவிட ஆட்சிக்கு முடிவு

## முதல்வராகிறார் விஜய்...



தமிழக சட்டசபை தேர்தலில், 108 இடங்களில் வென்று, தனிப் பெரும் கட்சியாக த.வெ.க., உருவெடுத்தது. கடந்த 6ம் தேதி, கவர்னர் ராஜேந்திர அர்லேக்கரை சந்தித்த விஜய், காங்கிரசின் ஐந்து எம்.எல்.ஏ.,க்களையும் சேர்த்து, 113 பேர் ஆதரவு இருப்பதாக கூறி, தன்னை ஆட்சி அமைக்க அழைக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.,க்களின் ஆதரவு இருப்பதற்கான ஆதாரத்தை கொடுத்தால் மட்டுமே, ஆட்சி அமைக்க அழைக்க முடியும் என கவர்னர் உறுதியாக கூறி விட்டார்.

பெரும்பான்மைக்கு தேவையான, 118 என்ற எண்ணிக்கையை அடைய, தலா இரண்டு எம்.எல்.ஏ.,க்களை கொண்டுள்ள வி.சி.க., மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதரவை பெறும் முயற்சியில் விஜய் இறங்கினார். இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் ஆதரவு அளிப்பதாக அறிவித்தனர். இதன் பிறகும் அவருக்கு 116 எம்.எல்.ஏ.,க்கள் ஆதரவு மட்டுமே இருந்தது.

முஸ்லிம் லீக் ஆதரவு தர மறுத்த நிலையில், மீதம் இருந்த விசிக ஆதரவு தராமல் இழுத்தடித்தது. கட்சிநிர்வாகிகள் உள்ளிட்டோருடன் திருமாவளவன் தொடர் ஆலோசனை நடத்தி வந்தார். அவருடன் தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜூனா தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வந்தார். இதன் பயனாக, நேற்று விஜய் ஆட்சி அமைப்பதற்கான ஆதரவு கடிதத்தை திருமாவளவன் வழங்கினார்.

கடிதத்தை ஆதவ் அர்ஜூனா பெற்றுக்கொண்டார். கடிதத்தில் விஜய் ஆட்சி அமைக்க நிபந்தனையற்ற ஆதரவு தெரிவிப்பதாக, திருமா குறிப்பிட்டுள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய ஆதவ் அர்ஜூனா, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் மற்றும் என்னுடைய ஆசான் விசிக கட்சி தோழர்களுக்கு நன்றி. ஜனநாயகம் காக்கப்படும். மக்களின் ஆதரவுடன் தமிழகத்தின் முதல்வராக விஜய் அமருவார்" என்று தெரிவித்துள்ளார்.

விடுதலைசிறுத்தைக் கட்சிகள் ஆதரவு அளித்ததையடுத்து, இந்திய யூனியன் முஸ்லீம் கட்சியும் தவெகவுக்கு ஆதரவளித்தது. இதையடுத்து, தவெக கட்சிக்கு ஆதரவு 120 ஆக உயர்ந்தது.

கடந்த 1967ம் ஆண்டுக்கு பிறகு தமிழகத்தை மாற்றி இரு திராவிட கட்சிகள் ஆட்சியமைத்து வந்தன. கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு பிறகு, புதிய கட்சி ஒன்று தமிழகத்தில் ஆட்சியை பிடித்து சாதனை படைத்துள்ளது.

# காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் நன்றி கூட சொல்லவில்லை -ஸ்டாலின் வருத்தம்



தமிழக முன்னாள் முதல்வர் ஸ்டாலின் தனது ஃபேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

"தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு, நடக்கும் நிகழ்வுகளை நீங்கள் பார்க்கிறீர்கள். எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மைகிடைக்காத வகையில் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன. நான் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில், புதிய ஆட்சி அமைவதற்கு இடையூறாக இருக்க மாட்டோம் என்றும், ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக தி.மு.க. செயல்படும் என்றும் சொல்லியிருந்தேன். அதன்பின், என் தலைமையில் நடந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், முடிவெடுக்கும் பொறுப்பை எனக்குக் கொடுத்தார்கள். அந்தக் கூட்டத்தில், "கட்சியின் நலனை மனதில் வைத்து, தலைமைக் கழக நிர்வாகிகளுடன் கலந்து பேசி முடிவெடுப்பேன்" எனத் தெரிவித்தேன்.

கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் நன்றி தெரிவிக்க அண்ணா அறிவாலயம் வரவில்லை. ஒரே நாளில் தி.மு.க.வுடனான உறவை முறித்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி சென்றது. இந்நேரத்தில் மிக முக்கியமான சோதனைக் காலத்தில் உறுதியுடன் உடன் நின்ற தோழமை இயக்கத் தலைவர்கள் பேராசிரியர் காதர் மொகிதீன், அண்ணன் வைகோ, சகோதரி பிரேமலதா விஜயகாந்த், பேராசிரியர் ஜவாஹிருல்லா, சகோதரர்கள் ஈஸ்வரன், தமிமுன் அன்சாரி உள்ளிட்ட அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களின் உறுதிக்கு எத்தகைய நன்றியும் பாராட்டும் பொருந்தும்.' என்று அவர் தெரிவித்துள்ளார்.

## திருமாவளவன் முதல்வர்...அதிமுக கூட்டத்தில் நடந்த விவாதம்!





திமுக- அதிமுக ஆதரவுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனை முதல்வராக்க எடப்பாடி பழனிசாமி மறுத்ததால் விஜய் கட்சி ஆட்சி அமைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சட்டசபை தேர்தலில் 108 இடங்களை வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெக ஆட்சி அமைக்க போராடியது. அதே நேரத்தில் திமுக தரப்பில், திருமாவளவனை முதல்வராக்கும் முயற்சி நடந்தது. அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியுடன் இது பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதுதொடர்பாக நடந்த ஆலோசனை கூட்டத்தில், அதிமுகவின் சீனியர்களான கேபி முனுசாமி, சிவி சண்முகம் , எஸ்பி வேலுமணி உள்ளிட்டோர், "திருமாவளவனை முதல்வராக்குவதற்காக நாம் விட்டுக் கொடுக்கலாம்.." என எடப்பாடி பழனிசாமியிடம் வலியுறுத்தினர்.

ஆனால், எடப்பாடி பழனிசாமி ஆதரவு எம்.எல்.ஏ.க்கள், "நமது கட்சியின் பொதுச்செயலாளர் முதல்வராவதற்குதான் நமக்கு முக்கியம். முதல்வர் பதவியை விட்டுத் தர வேண்டாம்.. திருமாவளவனுக்குதான் துணை முதல்வர் பதவி தருகிறோம்; கேட்கிற அமைச்சரவை இலாகாக்கள் கொடுக்கிறோம் என கூறியுள்ளோம். அதை ஏற்காவிட்டால் நாம எப்படி ஒப்புக் கொள்வது?" என அழுத்தமாக பேசினர். இதனையே எடப்பாடி பழனிசாமியும் ஏற்றுக் கொண்டார்.

இதனால், திருமாவளவன் முதல்வராகும் திட்டமும் அதிமுக,திமுக இணைந்து ஆட்சி அமைக்கும் திட்டமும் முடிவுக்கு வந்து விட்டது. இதையடுத்தே, அடுத்து ஆட்சி அமைக்கும் கட்சிக்கு வாழ்த்துகள் என்று பெயர் குறிப்பிடாமல் எடப்பாடி பழனிசாமி அறிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது.

## விஜய்க்கு பதவியேற்க அழைப்பு விடுத்த ஆளுநர்

விசிக,ஐயுஎம்எல் ஆகிய கட்சிகள் ஆதரவு கடிதம் வழங்கியதன் மூலம் விஜய் தலைமையில் தமிழகத்தில் அரசு அமைவது உறுதியாகியுள்ளது. இதற்காக , சனிக்கிழமை ஆளுநரை சந்தித்து தன்னை ஆட்சியமைக்க அழைப்பு விடுக்க நடிகர் விஜய் வேண்டுகோள் விடுத்தார். விஜய் எப்போது தமிழக நலனுக்கு எதிரான முடிவு எடுத்தாலும் மேற்கண்ட கட்சிகளின் ஆதரவு தொடருமா என்பது கேள்விக்குறிதான். தமிழக நலன் காக்கும் அரசா என்பதை இனிவரும் காலங்களில் விஜயின் செயல்பாடுகள் தான் முடிவு செய்யும். விரைவில் விஜய் தமிழக முதல்வராக பதவியேற்பார். அவருடன் அமைச்சர்களும் பதவியேற்கவுள்ளனர்.

# விஜய் அமைச்சரவையில் யாருக்கு என்ன துறை?

தவெகவின் ஆட்சி தமிழகத்தில் அமையவுள்ளது. நடிகர் விஜய் முதல்வராக பொறுப்பேற்கவுள்ளார். அவரது அமைச்சரவையில் இடம் பெறப் போவது யார் யார் என்று பார்க்கலாம்.

அனுபவம் வாய்ந்த ஜே.சி.டி. பிரபாகர் சபாநாயகராகத் தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்புள்ளதாம். விஜயின் நிழலாக வலம் வரும் புஸ்ஸி ஆனந்த், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சராக வாய்ப்புள்ளது.

கட்சியின் முக்கிய முகமாகப் பார்க்கப்படும் ஆதவ் அர்ஜுன், மின்சாரம் மற்றும் மதுவிலக்குத் துறையைக் கேட்டிருப்பதாக கூறப்படுகிறது. இதே, மின்சாரம் மற்றும் மதுவிலக்குத் துறையை நிர்மல் குமாரும் கேட்டுள்ளாராம். மூத்த நிர்வாகியான செங்கோட்டையனுக்கு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை வழங்கப்படலாம்.

அருண்ராஜ் வணிகவரி மற்றும் உணவுத் துறையைப் பெற குறி வைத்துள்ளார். இவை தவிர சுகாதாரம், கனிம வளம், வீட்டுவசதி வாரியம், போக்குவரத்து, பால்வளத்துறை, பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி ஆகிய துறைகளுக்குக் கடும் போட்டி நிலவுகிறது. ஒவ்வொரு துறைக்கும் குறைந்தது நான்கு பேராவது முட்டி மோதுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு ஒரு அமைச்சரவை பதவி வழங்கப்படும். குளச்சல் தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ தாரகை அமைச்சராக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

EMPOWERING EDUCATION SINCE 1983
40+ YEARS

EXPLORE, EXPERIMENT & EXCEL WITH SRI RAMAKRISHNA INSTITUTIONS



SNR SONS TRUST
SRI RAMAKRISHNA INSTITUTIONS
COIMBATORE

Autonomous Institutions Accredited by NAAC & NBA | Merit, Sports & Alumni Scholarships | Industry-Sponsored Centres of Excellence & Incubation Centres
Study Abroad with Foreign Universities | International Alumni Chapters | Top NIRF Ranked Institutions
Industry Focused Curriculum | State-of-the-art Hostels for Boys and Girls | Advanced infrastructure
200+ Recruiters

14 Institutions | 25,000+ Students | 2200+ Faculty Members | 100+ Degree Programs

Sri Ramakrishna Engineering College (Autonomous)
0422 2460088 / 75300 89997
Vattamalaipalayam, Coimbatore - 641 022

Sri Ramakrishna College of Arts & Science for Women (Autonomous)
0422 2243624 / 73731 44766
Siddhapudur, Coimbatore - 641 044.

Sri Ramakrishna Institute of Paramedical Sciences - Pharmacy
0422 4500164 / 95666 31228
Siddhapudur, Coimbatore - 641 044.

Sri Ramakrishna Institute of Allied Health Sciences
0422 2247756 / 91500 60555
Siddhapudur, Coimbatore - 641 044.

Sri Ramakrishna Matric Higher Secondary School
0422 2461977 / 99655 25777
Vattamalaipalayam, Coimbatore - 641 022

Sri Ramakrishna College of Arts & Science (Autonomous) (Co-Education)
0422 2562788 / 99423 20001
Nava India, Avinashi Road, Coimbatore - 641 006

Sri Ramakrishna Dental College & Hospital
0422 2560381 / 98422 56100
Avarampalayam, Coimbatore -641006.

Sri Ramakrishna Institute of Paramedical Sciences - Nursing
0422 4500162 / 99406 23360
Siddhapudur, Coimbatore - 641 044.

Sri Ramakrishna Matric Higher Secondary School
0422 2562799 / 75399 85074
Avarampalayam, Coimbatore - 641 006

Sri Ramakrishna Advanced Training Institute
96004 22851 / 97894 54501
Vattamalaipalayam, Coimbatore - 641 022

Sri Ramakrishna Institute of Technology (Autonomous)
0422 2605577 / 75987 41852
Perur Chettipalayam, Coimbatore - 641 010

Sri Ramakrishna Polytechnic College
97893 50600 / 97875 67892
Vattamalaipalayam, Coimbatore - 641 022

Sri Ramakrishna Institute of Paramedical Sciences - Physiotherapy
0422 4500193 / 97905 50666
Siddhapudur, Coimbatore - 641 044.

Sri Ramakrishna Central School (CBSE)
0422 2568666 / 73731 11966
Avarampalayam, Coimbatore - 641 006

MAJOR RECRUITERS

SNR SONS TRUST
No. 395, Sarojini Naidu Road, Siddhapudur, Coimbatore - 641 044
98941 98947
www.snrsonscharitabletrust.org
SCAN FOR MORE INFORMATION

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)